**பொல்கஹவெல பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொல்கஹவெல பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்களுக்காக குறித்த நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 52,399,386 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 53,585,041 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,185,655 தொகை கட்டிட பெறுமதி கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 09 கணக்கு விடயங்களுக்குரிய துணைப் பதிவேடுகளின் மீதிகளுடன் ரூபா 8,286,350 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 76,257,948 ஆக காணப்பட்டதுடன், ரூபா 11,140 தொகை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மதிப்பிழந்த காசோலை மீதிகளாகும்.

#### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 69,979,154 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் அதில் 13 சதவீதம் அதாவது ரூபா 9,167,828 தொகை ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மீதிகளாகும்.

#### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

(அ) ரூபா 11,675,717 பெறுமதியான 05 கணக்கு விடயங்களுக்குரிய வைப்புப் பதிவேடுகள், பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக்கணக்கு பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் 98 காணித் துண்டுகள் காணப்பட்ட போதிலும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 52 காணிகள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 46 காணிகளுக்கான உறுதிகள் சபையிடம் காணப்படவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,333,922 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,195,720 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,861,798 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவுகளுக்கு ரூபா 17,497,917 ஆன மூலதன உதவிகள் மற்றும் ரூபா 37,290,268 ஆன மூலதனச் செலவுகளை சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 8,541,571 ஆன மிகையொன்றாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | வருமானம் | | | | செலவினம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 24,253 | 15,309 | 8,944 | தனிப்பட்ட வேதனம் | 84,485 | 61,418 | 23,067 |
| (ii) | ஏனையவை | 124,660 | 101,558 | 23,102 | ஏனையவை | 36,094 | 23,253 | 12,841 |
| | உப மொத்தம் | 148,913 | 116,867 | 32,046 | உப மொத்தம் | 120,579 | 84,671 | 35,908 |
| (iii) | மூலதன வருமானம் | 17,498 | 58,738 | (41,240) | மூலதன செலவினம் | 37,290 | 102,535 | (65,245) |
| | மொத்தம் | 166,411 | 175,605 | (9,194) | மொத்தம் | 157,869 | 187,206 | (29,337) |
| | செயற்பாட்டு விளைவு | 28,334 | 32,196 | (3,862) | மிகை/ பற்றாக்குறை | 8,542 | (11,601) | 20,143 |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 148,913,256 தொகையில் 83.7 சதவீதமான ரூபா 124,660,507 தொகை சபையினால் உருவாக்கப்படாத வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக்

கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளை உள்ளடக்கியுள்ளது. அவ்வாறே மூலதன வருமானமாகிய ரூபா 17,497,917 ஆன மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக கிடைக்கப்பெற்ற பணத்தினை அடங்கியுள்ளது. அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 70 சதவீத குறைவொன்றாகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 120,579,333 தொகையில் அண்ணளவாக 70 சதவீதமான ரூபா 84,485,263 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தததுடன் அவற்றில் மொத்தமாக 89 சதவீதம் அதாவது ரூபா 75,006,692 ஆன சம்பள மீளளிப்பாக உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அது ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீண்டெழும் செலவினம் 42 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(இ) மூலதனச் செலவினமான ரூபா 37,290,268 தொகையில் அண்ணளவாக 6.3 சதவீதம் அதாவது ரூபா 2,346,284 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 93.7 சதவீதமான ரூபா 34,943,984 கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும். அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 63 சதவீதத்தினால் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக நிதிஏற்பாடு குறைவாக இருந்தன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **2015** | | | **2014** | | |
|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளவாறா ன | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | மதிப்பிடப் பட்டது | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 9,252 | 11,177 | 7,025 | 8,352 | 6,183 | 6,198 |
| (ii) குத்தகை வாடகை | 7,898 | 6,160 | 2,304 | 6,619 | 5,446 | 3,205 |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 3,126 | 487 | - | 2,585 | 657 | 50,377 |
| (iv) ஏனைய வருமானம் | 91,242 | 56,083 | 55,546 | 93,634 | 104,514 | - |
| மொத்தம் | 111,518 | 73,907 | 64,875 | 111,190 | 116,800 | 59,780 |

2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

ஆண்டின் பட்டியலிட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | மொத்தம் | நிலுவை மீதி 2015/01/01 இல் நிலுவை | பட்டியிலிடப்பட்ட வருமானத்தில் சேகரித்த வருமானம் | 2015/12/01 இல் நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி (10) | 6,198 | 9,628 | 15,826 | 2,152 | 6,649 | 8,801 | 4,046 | 2,979 | 7,025 |
| வாடகை (20) | 3,205 | 5,638 | 8,843 | 1,592 | 4,947 | 6,539 | 1,613 | 691 | 2,304 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் (30) | - | 256 | 256 | - | 256 | 256 | - | - | - |
| ஏனைய வருமானம் (40,50,60,70) | 31,125 | 116,994 | 148,119 | 30,409 | 62,164 | 92,573 | 716 | 54,830 | 55,546 |
| மொத்தம் | 40,528 | 132,516 | 173,044 | 34,153 | 74,016 | 108,169 | 6,375 | 58,500 | 64,875 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்னற.

(அ) நிலுவை வீதவரி மற்றும் வரியின் கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 9,628,000 வருமானம் பட்டியலிடப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 6,649,000 தொகை மாத்திரம் அதாவு 69 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 596,334 ஆகவும் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 30,258,578 ஆகவும் இருந்தன.

(இ) சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் ஒப்பந்தத்தின் 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அந்தந்த மாதங்களின் தவணைப் பணம் அடுத்த மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டியதுடன், தவணைப் பணத்தை செலுத்த தாமதித்தால் அதற்காக 10 சதவீத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். எனினும் தவணைப் பணம் தாமதமாகச் செலுத்திய 03 சொத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 28,517 ஆன தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பெல்கஹவெல பொதுச் சந்தையின் 54 கடைகள் நீண்டகால குத்தகை வழங்கலின் கீழ் மாதாந்த வாடகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையின் 06(அ) பிரிவின் பிரகாரம் மாதாந்த வாடகை தொகை அந்தந்த மாதத்தின் 10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சபைக்கு செலுத்த வேண்டியதுடன், தவணைப் பணத்தை செலுத்த தாமதித்தால் அதற்காக 10 சதவீதம் தண்டப்ணம் அறவிடப்பட வேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டிற்காக 01 மற்றும் 02 ஆம் இலக்க கடைகளுக்காக மாதாந்த வாடகை பணம் தாமதமாகச் செலுத்தியிருந்த வாடகைப் பணத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 21,000 ஆன தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2004 ஆம் ஆண்டில் பந்தாவ இறைச்சிக் கடைக்கான நிலுவை குத்தகை தொகையான ரூபா 124,424 தொகையை அறவிடுவதற்கான வழக்கு தற்போது செயற்படுத்தப்படாதிருந்ததுடன் அக்குத்தகையை அறவிடுவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இனங்காணப்பட முடியாதிருந்தது.

(ஊ) 2007 ஆம் ஆண்டில் பொதுச் சந்தையின் 45 மற்றும் 46 ஆம் இலக்க இறைச்சிக் கடைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 117,104 ஆன பணத்தை அறவிடுவதற்காக வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கில் இத்தொகை செலுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்நபரை கண்டு பிடிக்க முடியாமையால் அப்பணத்தை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்படுகின்றது.

(எ) 1991 ஆம் ஆண்டின் போது பொல்கஹவெல இலங்கை வங்கிக்கு வழங்கப்பட்ட குத்தகை ஆதனங்களுக்காக ரூபா 41,250 ஆன நிலுவை வாடகையை 2015 ஆம் ஆண்டளவிலும் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மின்சார கடமை அறைக்காக நிலுவை வாடகையாக ரூபா 7,192 தொகை அறவிடப்பட வேண்டிய தரப்பினர் குறிப்பாக இனங்காணப்பட முடியாதிருந்ததுடன் இந்நிலுவை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமையொன்று காணப்பட்டது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 10 ஆந் திகதிய உடன்படிக்கை பிரகாரம் ரூபா 30,000 தொகைக்கு பொல்கஹவெல பொதுச் சந்தையின் 01 மற்றும் 02 ஆம் இலக்க கடைகள் சதொச நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் முன்னைய உடன்படிக்கை பிரிவின் பிரகாரம் 47 ஆம் இலக்க கடை ரூபா 850 மாத வாடகை கட்டணத்தில் சதொச நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் மாதாந்தம் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 செப்தெம்பர் 27 ஆந் திகதிய குரு/குபி/1795 ஆம் இலக்க மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 47 ஆம் இலக்க கடைக்கு மாதாந்தம் ரூபா 850 மதிப்பீட்டு பெறுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 பெப்ரவரி முதல் சபையினால் 47 ஆம் இலக்க கடைக்காக பட்டியலிட்டு உரிய பணத்தை அறவிடாததன் பேரில் ரூபா 50,150 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது.

(இ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாமல் காணப்படும் வைப்பு மீதிகளின் பெறுமதி ரூபா 1,029,509 ஆக இருந்தது.

(ஈ) ஊழியர், சேமலாப நிதியத்திலிருந்து சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 440,517 பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியினை குறித்த மூன்று நலனாலிகளுக்கு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக்களின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(உ) காணி துண்டாக்கி விற்பனை செய்யும் போது சபைக்கு அறவிட வேண்டிய 1 சதவீத வரித்தொகை கணிப்பீடு செய்யும் போது சரியான விற்பனை பெறுமதி அடிப்படையில்

கணிப்பீடு செய்யாமையால் பேர்ச் ஒன்றின் விலை ரூபா 52,000 முதல் ரூபா 137,500 பெறுமதியான வீரம்புகெதர ஹங்வெல்ல வங்குருவெல்ல பிடிய காணியின் 594 பேர்ச்களுக்கு ரூபா 323,398 தொகையும் பேர்ச் ஒன்று ரூபா 85,000 முதல் விற்பனை செய்யப்பட்ட தம்பகஹமுல்ல வத்த பீதுருவெல்ல காணியின் 171.4 பேர்ச்களுக்கு ரூபா 93,239 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

வடமேல் மாகாணத்தின் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயற்படுத்துவதற்காக தலைமைத்துவத்தை வழங்கும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அவர்களின் கடமைகளுக்காக மோட்டார் சைக்கிலில் பிரயாணம் செய்வதற்காக மாதத்திற்கு ஆகக் கூடியது ரூபா 3,000 ஆன எரிபொருள் படியொன்று சபை நிதியத்திலிருந்து வழங்குவதற்காக வடமேல் மாகாண ஆளுனரின் 2012 யூன் 11 ஆந் திகதிய NW/GOV/AD/24/5 ஆம் இலக்க அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கடமைகளுக்காக உத்தியோகபூர்வ வாகனமொன்றும் அதற்குரிய எரிபொருள் சபையினால் வழங்கப்படும் தலைவருக்கு 2012 யூலை முதல் 2015 யூலை வரை ரூபா 111,000 தொகை எரிபொருளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு குறித்த திகதியில் பணம் செலுத்தப்படாததன் பேரில் 2015 மார்ச் 02 ஆந் திகதி ரூபா 20,119 ஆன மிகை கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**4.2 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டி கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 1,255,000 தொகை பெறுமதியான 68-3676 இலக்க டிபர் வண்டி மற்றும் ரூபா 1,319,050 தொகை பெறுமதியான LF-4884 இலக்கம் கொண்ட பெலரோ ஜீப் வண்டி முறையே 2013 மற்றும் 2014 ஆண்டுகள் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

**05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்